# கர்நாடக இசையில் நமது கீர்த்தனைகளை பற்றி பகிர்ந்து கொள்தல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இன்று நாகரிகம் மிகுந்து, கொச்சையான கானாப் பாடல்கள் பாடுகிற இந்த காலத்தில், பக்தியுடன் நாம் பாடுகின்ற பாடல்களை கர்நாடக இசையில் பாடவேண்டும் என்ற ஆர்வம் தற்போது நம்மிடையே மேலோங்கி நிற்பதை காண்கிறோம்.

இசைக்கு மொழியோ, மத விசாரங்களோ இல்லை. குறிப்பிட்ட மதப்பாடல்களை அல்லது மொழிப் பாடல்களை இப்படித்தான் பாட வேண்டும் என்ற நியதியும் இல்லை.

பாடப்படும் பாடல்கள், கேட்பவரை நற்சிந்தையுடனும், நன்னடத்தையுடனும், ஆன்மீக நெறியுடனும், பக்தி பரவசத்தை தூண்டும்படியாகவும் தூய்மையான எண்ணத்தை கேட்பவருக்குள் கிளர்ந்து எழும்படியாகவும் செய்ய வேண்டும். அதுவே இசை. அத்தகைய உணர்வு மேற்கத்திய இசையிலும் கிடைக்கும். கர்நாடக இசையிலும் கிடைக்கும். கர்நாடக இசை உணர்வு பூர்வமானது. கடவுளிடம் பாடப்படுகின்ற பாடல்கள் நன்றியை உணர்த்துவதாக இருப்பினும் சரி, வேண்டுதலாக இருப்பினும் சரி, பாடல் பாடுபவரின் உணர்வு நிச்சயமாக வெளிப்பட வேண்டும். கூட்டிசையில் உணர்வு வெளிப்படுமோ என்கிற ஐயமும், கர்நாடக இசையின் நுட்பங்கள் கூட்டு வழிபாட்டு இசையில் வராது என்றும், சிலருக்கு ஐயம் ஏற்படுவது இயற்கை. பாடலின் பாவம், மனதில் பதியும் போது இசை அதாவது மெட்டு தானாகவே வந்துவிடும். ஆதலால் பாடும் போது உள்ளம் உருகி இசை வழியாக பாடலின் பொருளில் ஒன்றுபட்டு நம்மைநாமே இறைவனுக்கு அர்ப்பணிப்பதே முக்கியம். இது கூட்டிசையாக இருப்பினும் சரி, தனி நபர் பாடும் போது உள்ளம் உருகி கேட்கும் போதும் அர்ப்பணித்தல் நிச்சயமாக நடக்கும்.

மேற்கத்திய இசையை ஒட்டி மெட்டமைக்கும் பாடல்களாக இருப்பினும் சரி, கர்நாடக இசையை ஒட்டி மெட்டமைக்கும் பாடல்களாக இருப்பினும் சரி, ஓரிரண்டு முறை பாடியோ அல்லது பிறர் பாட கேட்டால் மட்டுமே வழிபாட்டில் பாட இயலும். நம்முடைய கீர்த்தனைகளை ஓரிரு இராகங்களை கொண்டு, அநேக பாடல்களை தெரிந்து கொள்ளலாம். அப்படி அமைக்கப்பட்ட பாடல்கள் ஒரு இராகத்திற்கு அநேக பாடல்கள் வீதம் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. கீர்த்தனைகள் அனைத்தும் கம்பீரமான இராக அமைப்புடனும், உணர்வு ததும்பும்படியாகவும், இசையமைக்கப்பட்டுள்ளன. கீர்த்தனைகளைப்

பாடுவதின் மூலமோ, பயிலுவதின் மூலமோ கர்நாடக இசையில் ஓரளவு நல்ல நிலையை அடையலாம். நம்முடைய கீர்த்தனைப் பாடல்களை கர்நாடக இசையில் கச்சேரியாக பாடினால் நிச்சயமாக நல்ல வரவேற்பை பெறும்.

கீர்த்தனைகளை கிறிஸ்தவ சமூகத்தினரின் இல்லங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள், தேவாலயங்களின் முக்கிய நிகழ்ச்சிகள் போன்றவற்றில் உணர்வு பூர்வமாக இறைவனின் புகழை பாடலாக பாடி நீங்களும் மகிழ்ந்து, கேட்பவரையும் மகிழச்செய்து பக்தியை ஊட்டலாம். ஆகவே நம்முடைய கிறிஸ்தவ கீர்த்தனைப் பாடல்கள் உணர்வு பூர்வமாக ஆலயங்களிலோ அல்லது வழிபாட்டு இடங்களிலோ பாடுகின்ற போது கீர்த்தனை பாடல்களை எழுதி, பண் இசைத்தவர்களை நினைவு கூருகிறோம். அதே வேளையில் வரும் தலைமுறையினருக்கும் இந்த பாடல்களை கற்று கொடுக்கிறோம். இந்த கிறிஸ்துவ கீர்த்தனை பாடல்களை வரும் நாட்களில் அதிகமாக பயன்படுத்தும் போது அதனுடைய பெருமையும், புகழும் மங்காமல் இருக்கும்.

அன்புடன்,

இறைவனின் இசை பணியில்

**D.தாஸ்**

இசையமைப்பாளா